

பக்கம் 13

# ஜாலான் மஸ்ஜிட் இந்தியா பாதுகாப்பான பகுதி

## மேயர் மைமூனா அறிவிப்பு

கோலாலம்பூர், செப். 7– பொதுமக்கள் வருகை புரிய ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவின் முழுப் பகுதியும் பாதுகாப்பாக உள்ளது. அங்கு கடைகளையோ கட்டடங்களையோ மூடும்படி உத்தரவிடப்படவில்லை என்று கோலாலம்பூர் மாநகர் மன்ற மேயர் டத்தோஸ்ரீ டாக்டர் மைமூனா முகமது ஷரிப் குறிப்பிட்டார்.

### ஜாலான் மஸ்ஜிட் இந்தியா...

தற்போதைக்கு விஸ்மா யாக்கின் கட்டடத்திலிருந்து போலீஸ் சாவடி வரை சுமார் இருநூறு மீட்டர் வரைக்குமான நடைபாதை மட்டுமே தடுப்புகளால் மூடப்பட்டுள்ளது. நிலஅமிழ்வு நிகழ்ந்த பகுதியில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் அப்பகுதியில் தடுப்புகள் போடப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

நிலஅமிழ்வு நிகழ்ந்த சம்பவத்தின்போதுகூட அங்காடிக் கடைகளை (ஸ்டால் கடைகள்) மூடும்படி நாங்கள் உத்தரவிடவில்லை. சம்பந்தப்பட்ட ஒரு பகுதியை மட்டுமே நாங்கள் மூடியிருக்கிறோம். நடைபாதை வழியாக மக்கள் எப்போதும் வந்துபோகலாம் என்றார் மைமூனா சொன்னார்.

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவின் வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகளை வியாழக்கிழமை சந்தித்தோம். சுற்றுப் பகுதி பாதுகாப்பாக இருக்கிறது என்று நாங்கள் அவர்களுக்கு உறுதியளித்தோம். குறிப்பிட்ட ஒரு பகுதி மட்டுமே தடுப்புகளால் மூடப்பட்டுள்ளது என்று அவர்களிடம் எடுத்துரைத்திருக்கிறோம் என்று தேசிய செய்தி நிறுவனமான பெர்னாமாவிடம் மைமூனா சொன்னார்.

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் ஆகஸ்டு 23ஆம் தேதியன்று திடீரென்று நிகழ்ந்த நிலஅமிழ்வினால் ஏற்பட்ட எட்டு மீட்டர் ஆழக்குழியில் இந்தியாவின் ஆந்திராவைச் சேர்ந்த ஜி.விஜயலட்சமி விழுந்தார். அதனைத் தொடர்ந்து ஒன்பது நாட்களாக தேடும் பணி மேற்கொள்ளப்பட்டாலும் அவரின் உடல் கண்டுபிடிக்கப்படவில்லை.